RBI/2008-09/320
RPCD.CO.RRB.BC.No.75/03.05.28-b/2008-09

டிசம்பர் 10, 2008

அனைத்து பிராந்திய கிராமப்புற வங்கிகள்

அன்புடையீர்

**கடன் கொடுப்பவர்கள் பின்பற்றவேண்டிய சிறந்த நடைமுறை வழக்கங்களுக்கான நெறித்தொகுப்பு - வழிகாட்டுதல்கள் - பரிசீலனைக் கட்டணம் - செலவினங்கள் ஆகியவை குறித்த அனைத்து தகவல்களையும் வெளியிடுதல்**

மேற்குறிப்பிட்ட விஷயம் குறித்து மே 16, 2006 தேதியிட்ட எங்களின் சுற்றறிக்கை எண். RPCD.BOS/81/13.33.01/2005-06−ஐப் பார்வையிடவும். இதன்படி பிராந்திய கிராமப்புற வங்கிகள் உட்பட அனைத்து வணிக வங்கிகளும் சில சேவைகள் குறித்த கட்டணங்களை தமது அலுவலகங்கள், கிளைகளில் பொதுமக்களுக்கு தெரியும்படி வெளியிட அறுவுறுத்தப்படுகின்றன.

2. சில வங்கிகள் பரிசீலனை கட்டணம் தவிர சில இதர கட்டணங்களை கடனாளிகளுக்கு முன்னரே சொல்லாமல் பின்னர் விதிப்பது எங்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இவ்வாறு கடனாளிக்கு முன்னரே தெரிவிக்காமல் பின்னர் இவ்வாறு கட்டணங்களை விதிப்பது நியாயமான நடைமுறை வழக்கமாகாது என்பதை குறிப்பிடுகிறோம்.

3. ஆகவே பரிசீலனை, இதர கட்டணங்கள் குறித்த அனைத்து தகவல்களும் கடன் விண்ணப்ப படிவங்களிலேயே காட்டப்படுவதை உறுதிசெய்திடவேண்டுமென்று பிராந்திய கிராமப்புற வங்கிகள் அறிவுறுத்தப்படுகின்றன. மேலும் ஒரு கடன் மீதான அனைத்து செலவினங்களையும் வங்கிகள் ஒரு வாடிக்கையாளருக்கு தெரிவித்தால் அது அவர் மற்ற இடங்களிலிருந்து பெறும் நிதிஉதவிகளோடு ஒப்பிட்டுப் பார்க்க உதவியாக இருக்கும்.

தங்கள் உண்மையுள்ள

(G. ஸ்ரீனிவாசன்)
தலைமைப் பொது மேலாளர் (பொறுப்பு)